

கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதி, செந்துறை தெற்கு ஒன்றியம், பிலாக்குறிச்சி ஊராட்சி பாகம் 290 மற்றும் 291ல் ”என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை எஸ்.எஸ்.சிவசங்கர் கலந்து கொண்டு, வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். இக்கூட்டத்தில் செந்துறை தெற்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளர் பூ.செல்வராஜ், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் செ.இளஞ்செழியன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி, ஒன்றிய துணை செயலாளர் அன்பரசி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள், ஊர் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### மணப்பாறை தொகுதிக்குட்பட்ட பகுதிகளில்

# என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி பரப்புரை!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

திருச்சி,டிச.16-

என் வாக்கு சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரையை திருச்சி தெற்கு மாவட்ட திமுகவிற்கு உட்பட்ட மணப்பாறை தொகுதிக் குட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர், பகுதியில் அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு தலைகுனியாது என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் பூத் வாரியாக பரப்புரை கூட்டத்தை தமிழ்நாடு முதல்வரும் திமுக தலைவருமான மு. க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதன் தொடர்சியாக திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மணப்பாறை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பொன்னம்பட்டி பேரூர் பாகம் எண் 300, வையம்பட்டி தெற்கு குமாரவாடி ஊராட்சி சடையம்பட்டி பாகம் எண் 74, மணப்பாறை ஒன்றியம் செட்டியபட்டி ஊராட்சி பாகம் எண் 145, மணப்பாறை நகரம் வார்டு எண் 1 பாகம் எண் 98, ஆகிய பகுதிகளில் துவக்கி வைத்து பரப்புரையை மேற்கொண்டார்.



இந்நிகழ்வுகளின் போது தலைமை செயற்குழு உறுப்பினர் சபியுல்லா, ஒன்றிய கழகச் செயலாளர்கள் ராமசாமி, ராஜேந்திரன்,

பொன்னம்பட்டி பேரூர் செயலாளர் நாகராஜ், மணப்பாறை நகர கழக செயலாளர் மு .ம செல்வம், மணப்பாறை நகர மன்ற தலைவர் கீதா மைக்கேல் ராஜ், பாக முகவர்கள் மற்றும் வட்ட வார்டு கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



இளைஞர் எழுச்சி நாள் விழாவை கொண்டாடும் வகையில், கரூர் மாவட்டக் கழகம் சார்பில் ஸ்கேட்டிங் போட்டிகளை கரூர் வெண்ணைமலை மைதானத்தில் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

### நவ.27– இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு

# கரூரில் ஸ்கேட்டிங் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர், டிச.16 -

நவ.27 இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு நடைபெற்ற ஸ்கேட்டிங் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பரிசுகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக, விளையாட்டு திருவிழாவில் தொடர் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில், மொத்த பரிசுத் தொகை ரூ. 6,00,000/- மற்றும் பதக்கங்களுக்கான, மாநில அளவிலான ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஸ்கேட்டிங் போட்டிகள், கரூர்வெண்ணைமலை பி.எஸ். ஸ்போர்ட்ஸ் அரேனா மைதானத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்றன.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பதக்கங்களை கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வழங்கினார். விழாவில் எம்.எல்.ஏ.க்கள் இரா. மாணிக்கம், ஆர். இளங்கோ, க.சிவகாம சுந்தரி, வழக்கறிஞர் விஜயகுமார், பூவை ரமேஷ்பாபு, மாநகர செயலாளர் எஸ்பி. கனகராஜ், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் முத்துக் குமார், வேலுச்சாமி, துணை மேயர் தாரணி சரவணன், காலனி செந்தில், பகுதி செயலாளர்கள் வெங்கமேடு பாண்டியன், ஆர்எஸ்.ராஜா, ஜோதி பாசு, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ திட்ட விரிவாக்கம்!

# பெரம்பலூர் மாவட்டத்தில் 13,778 பேருக்கு பற்று அட்டைகள்!

## ம.பிரபாகரன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

பெரம்பலூர், டிச.16-

முதலமைச்சர் அவர்கள் சென்னை நேரு உள் விளையாட்டரங்கில் “வெல்லும் தமிழ்ப்பெண்கள்” என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை” விரிவாக்கத் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.

அரசின் பல்வேறு திட்டங்களின் மூலம் பயன் பெற்ற மகளிர் தங்களின் அனுபவத்தை கூறி னார்கள்.

இந்நிகழ்வுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக கூட்ட ரங்கிலிருந்து மக்களோடு மக்களாக அமர்ந்து நேரலையில் பார்வையிட்டு, பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 13,778 குடும்ப தலைவிகளுக்கு பணம் எடுக்கும் வகையிலான பற்று அட்டைகளை வழங்கினார்கள்.

“மங்கையராய் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா“ என்றார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள். அவர் இன்று இருந்திருந்தால் “மங்கையராய் தமிழ்நாட்டில் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா” என்றே சொல்லியிருப்பார்.

அந்த அளவிற்கு பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் மற்றும் பெண்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான 15.09.2023 அன்று காஞ்சிபுரத்தில் முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே ஒரு மைல்கல் திட்டமாக, மாதந்தோறும் மகளிருக்கு ரூ.1,000 வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

பெண்களின் வாழ்வில் பொருளாதார புரட்சியை ஏற்படுத்தும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம் பெரம்பலூர் வட்டத்தில் 26,119 மகளிருக்கும், வேப்பந்தட்டை வட்டத்தில் 30,681 மகளிருக்கும், குன்னம் வட்டத்தில் 31,008 மகளிருக்கும், ஆலத்தூர் வட்டத்தில் 22,515 மகளிருக்கும் என மொத்தம் 1,10,323 குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் வாயிலாக மாதந்தோறும் ரூ.1,000 பெற்று வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டம் தற்போது முதலமைச்சர் அவர்களால், இன்று விரிவுபடுத்தப்பட்டு கூடுதல் மகளிருக்கு மாதம் ரூ.1000 வழங்கப்படுகின்றது.

அதனடிப்படையில், பெரம்பலூர் வட்டத்தில் 3,455 மகளிருக்கும், வேப்பந்தட்டை வட்டத்தில் 4,031 மகளிருக்கும், குன்னம் வட்டத்தில் 3,486 மகளிருக்கும், ஆலத்தூர் வட்டத்தில் 2,806 மகளிருக்கும் என மொத்தம் 13,778 குடும்பத் தலைவிகளுக்கு விரிவாக்கத்தின் மூலம் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் வாயிலாக மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கு நேற்றைய தினமே அவரவர் வங்கிக்கணக்கில் ரூ.1000 வரவு வைக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.

மகளிர் உரிமைத்திட்டத்தில் பயனடைந்த ஒவ்வொரு மகளிரும் முதலமைச்சர் அவர்களுக்கு மகிழ்ச்சி பொங்க நன்றி தெரிவித்தனர்.

இன்று விழா நடைபெற்ற அரங்கிற்கு அருகிலேயே அமைக்கப்பட்டிருந்த நடமாடும் ATM வாகனத்தில் இன்று மகளிர் உரிமைத்திட்டத்தில் பயன் பெற்ற மகளிர் மகிழ்ச்சியோடு பணம் எடுத்து சென்றனர்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் க. கண்ணன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வைத்தியநாதன், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி சிவக்கொழுந்து வருவாய் கோட்டாட்சியர் திருமதி அனிதா, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ந.சக்திவேல், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பாரத்குமார், நகர் மன்றத் ஆதிதிராவிடர் நல அலுவலர் வாசுதேவன், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் சரவணன், அனைத்து முதல் நிலை அலுவலர்கள், அனைத்து வட்டாட்சியர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் மேக்கரிமங்கலத்தில் இருந்து ஆடுதுறை மயிலாடுதுறை வழிதடத்தில் புதிய பேருந்தினை மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம் முருகன் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். உடன் கு. வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, வெடி எஸ்.பாலமுருகன், கோசி.மதி.திருமாவளவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கழக இளைஞரணி செயலாளர். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை அயலக அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் கவுன்சிலர் கவிவேந்தன் ஏற்பாட்டில் புதுக்கோட்டை அய்யனார் திடலில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு புதுக்கோட்டை வடக்கு மாநகர பொறுப்பாளர், துணை மேயர் எம்.லியாகத் அலி பரிசுகள் வழங்கினார். நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீரை.தமிழ்ராஜா, மாநகர அவைத் தலைவர் ரெத்தினம், மாநகர துணை செயலாளர் மணிவேலன் மற்றும் பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி அடுத்த வரட்டனப்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளியில், வரட்டனப்பள்ளி, சிந்த கம்பள்ளி, மேல்கொட்டாய் ஆகிய அரசு மேல் நிலைப்பள்ளிகளில் பிளஸ் 1 பயிலும் 219 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா சைக்கிள்களை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார். இந்நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி மாவட்ட அவைத்தலைவர் நாக ராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் நாகராஜன், ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கழக தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் சட்டமன்ற தொகுதி ஒசூர் மாநகராட்சி மூக்கொண்டப்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில் நலன் காக்கும் ஸ்டாலின் முகாமினை கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர், ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ,மாநகர செயலாளரும் மேயருமான சத்யா, தொடங்கி வைத்து உரிய பயனாளிகளுக்கு சான்றிதழ் மற்றும் தாய்மார்களுக்கு அரசின் சார்பில் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார் உடன் மாநகர துணை மேயர் ஆனந்தய்யா, வெங்கடேஷ், ராமு, ராமய்யா, ஸ்ரீலட்சுமி நவீன், மோகன்பாபு, மத்தம் சந்திரன், அரசு அதிகாரிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. நிர்வாகிகள் வார்டு கழக செயலாளர்கள் பிரதிநிதிகள், வார்டு பாக நிலை முகவர்கள் (பி.எல்ஏ 2) பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (பி.டி.எ) ஆலோசனை கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க அலுவலகமான தளபதி அறிவாலத்தில் நடைபெற்றது கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் நாகை சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் ஆர்.அருள்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், மாவட்டக் கழக பொருளாளர் மு.வோகநாதன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து நாகை நகரக் கழக நிர்வாகிகள் இரா முருகையன், பிதிலகர், வெற்றிலை கடை சிவா, சித்ரா, ரமணி, செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.